**பிப்ரவரி – 07**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாயும் ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடுவும் இணைந்து அமராவதியில் நீதிமன்ற வளாகத்தைத் திறந்து வைத்தனர்.
    - இந்த நீதிமன்ற வளாகம் ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றத்திற்கான இடைக்கால உயர்நீதிமன்றத்தைக் கொண்டிருக்கும்.
- சிறைச்சாலை வடிவமைப்பிற்கான முதலாவது தேசிய மாநாடு ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் நடத்தப்பட்டது.
- பாரம்பரியக் கலைகளை இளைய கலைஞர்கள் பின்பற்றுவதை ஊக்குவிக்கும் வகையில் புதுடெல்லியில் “2019 சோபன்” என்ற 6 நாட்கள் நடைபெறும் இசை மற்றும் நடனத் திருவிழா நடத்தப்பட்டது.
    - இது புதுதில்லி மாநகராட்சி மன்றத்துடன் (New Delhi Municipal Council - NDMC) இணைந்து புதுதில்லி அரசாலும் சாகித்ய கலா பரிசத்தாலும் நடத்தப்பட்டது.
- விப்ரோ நிறுவனத்தின் தலைவரான அசிம் பிரேம்ஜி “எர்னஸ்ட் அண்ட் யங் வாழ்நாள் சாதனை விருதுக்குப்” பெயரிடப்பட்டுள்ளார்.
    - மிகப்பிரபலமாக EY என அறியப்படும் எர்னஸ்ட் அண்ட் யங் நிபுணத்துவ சேவைகளை அளிக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனமாகும். மேலும் இது நான்கு மிகப்பெரிய கணக்கியல் நிறுவனங்களில் ஒன்றாகும்.

# தேசியச் செய்திகள்

## ஆசியான் இந்தியா இளைஞர் மாநாடு

- அசாம் மாநில முதல்வர் சரபானந்தா சோனோவால் கௌஹாத்தியில் இரண்டாவது ஆசியான் இந்தியா இளைஞர் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.
- இரண்டாவது ஆசியான் இந்தியா இளைஞர் மாநாட்டின் கருத்துரு “இணைப்பு: பகிர்ந்து கொள்ளும் செழுமைக்கானப் பாதை” என்பதாகும்.
- ஆசியான் – இந்தியா இளைஞர் மாநாடு வெளியுறவுத் துறை அமைச்சகத்துடனும் ஆசியான் செயலகத்துடனும் இணைந்து இந்தியா பவுண்டேசன் என்ற அமைப்பால் நடத்தப்படுகின்றது.
- 2017 ஆம் ஆண்டில் முதலாவது இந்தியா ஆசியான் இளைஞர் மாநாடு “பகிரப்பட்ட மதிப்புகள், பொதுவான இலக்கு” என்ற கருத்துருவுடன் நடத்தப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆசிய உள்கட்டமைப்பு நிதி அறிக்கை 2019

- சமீபத்தில் சீனா தலைமை தாங்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian

Infrastructure Investment Bank - AIIB) ஆசிய உட்கட்டமைப்பு நிதி 2019 என்ற அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

- இந்த அறிக்கையின்படி
    - அடுத்த ஒரு வருடத்தில் இந்தியாவில் உட்கட்டமைப்பு நிதியளித்தலுக்கான செலவு அதிகரிக்கக்கூடும் என்று அது எதிர்பார்க்கின்றது.
    - மெதுவாக வளரும் உலகப் பொருளாதாரம், கடன் வாங்குதலுக்கான அதிக வட்டி மற்றும் புவியரசியல் பதற்றங்கள் ஆகியவை முதலீட்டாளர்களிடையே ஒரு மிகப்பெரிய நிச்சயமின்மையை ஏற்படுத்தியிருக்கின்றது.
    - இந்தியாவில் உட்கட்டமைப்பு நிதியளிக்கும் சூழ்நிலையானது பொது முதலீட்டால் ஆதிக்கம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதே வேளையில் உட்கட்டமைப்பிற்கான தனியார் முதலீட்டைத் திரட்டுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இனிமேல் தான் ஏற்பட வேண்டும்.

# பொருளாதாரச் செய்திகள்

## புதிய மின்னணு வர்த்தகக் கொள்கை

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 01-ம் தேதி முதல் இந்தியாவின் புதிய மின்னணு வர்த்தகக் கொள்கை நடைமுறைக்கு வந்தது. ஒரு புதிய வகை கொள்கை விதிமுறைகள் மின்னணு வர்த்தக நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.
- தொழிற்துறை கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையானது அந்நிறுவனங்களுக்கு அரசின் மாற்றியமைக்கப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டு (foreign direct investment) விதிமுறைகளோடு தங்களைப் பொருத்திக் கொள்ளும் வகையில் 60 நாட்கள் அவகாச காலத்தை வழங்கியிருக்கின்றது.


### *புதிய கொள்கையின் சிறப்பம்சங்கள்*

- நேரடி ஆன்லைன் சில்லறை வர்த்தகர்கள் அவர்கள் பங்கு வைத்திருக்கும் விற்பனையாளர்கள் வழியாக பொருட்களை விற்பனை செய்வதற்குத் தடை.
- மேலும் தங்களது விற்பனை நடைமுறைகளில் மட்டுமே பொருட்களை விற்பனை செய்வதற்காக அந்த பொருட்களின் உற்பத்தி நிறுவனங்களுடன் ஆன்லைன் விற்பனையாளர்கள் சிறப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்ளத் தடை.
- அனைத்து ஆன்லைன் சில்லறை வர்த்தகர்களும் தங்களது இணையதளத்தில் அனைத்து விற்பனையாளர்களையும் அவர்களது பொருட்களையும் விற்பதற்கு வழிவகை செய்யும் வகையில் ஒரு சரிசமமான நடைமுறையை நிர்வகிக்கக் கேட்டுக் கொள்ளப்படுவர்.
- இது இணையதள வர்த்தக வியாபாரிகள் விற்பனையாளர்களின் சரக்குக் கையிருப்பை கட்டுப்படுத்துவதைத் தடை செய்கின்றது.
- இது மிக அதிகமான தள்ளுபடிகளைத் தடுக்கும் நோக்கில் சந்தைகள் பொருட்களின் விலைகள் மீது தாக்கம் ஏற்படுத்துவதைத் தடுக்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## CAR-T சிகிச்சை

- இங்கிலாந்து அரசால் நிதியளிக்கப்படும் தேசிய சுகாதார சேவையால் ஒரு முன்னோடியான, புதிய புற்றுநோய் சிகிச்சையைப் பெறும் முதல் நோயாளியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 11 வயது சிறுவன் உருவாகியிருக்கின்றார்.
- CAR-T (Chimeric Antigen Receptor) என்பது தனிப்பட்ட முறையிலான புற்றுநோய் சிகிச்சையாகும்.
- இது நோய் எதிர்ப்பு செல்களை நீக்குவதில் ஈடுபட்டு அவைகளை ஆய்வகத்தில் மாற்றுவதன் மூலம் அவை புற்றுநோய் செல்களை அடையாளம் கண்டு கொள்ளச் செய்வதில் ஈடுபடுகின்றது.




- நோய் எதிர்ப்புச் சிகிச்சை என்பது ஒருவரது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு முறையையேப் பயன்படுத்தி அவரதுப் புற்றுநோயை ஒழிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வகை சிகிச்சை முறையாகும்.
- இச்சிகிச்சையின் முதல் நிலையில் நோயாளியிடமிருந்து எடுக்கப்பட்ட ரத்தமும் வெள்ளை ரத்த உயிரணுக்களும் பிரிக்கப்படும். மீதமுள்ள ரத்தம் நோயாளிக்கு திருப்பிச் செலுத்தப்படும்.
- அதன்பின் ஒரு சிறப்பு வகை நோயெதிர்ப்பு செல்லான T வகை செல்கள் மரபணுவிற்குள் செலுத்தப்பட தீங்கற்ற ஒரு வைரஸ் பயன்படுத்தப்படுகின்றது.
- இந்த மரபணுக்கள் ஆதாரமற்ற ஆன்டிஜென்களை ஏற்றுக் கொள்ளும் பொருள் என்றழைக்கப்படும் T-செல்களை தங்களது மேற்பரப்பின் மேல் ஒரு கொக்கியை ஏற்படுத்த தூண்டுகின்றது.
- நோயாளியின் புற்றுநோய் செல்களைக் கண்டறிந்து அழிக்கத் திட்டமிடுவதற்காக இந்த வடிவமைக்கப்பட்ட CAR-T செல்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் பொருத்தப்பட்டுப் பின் திரும்பவும் அவை நோயாளிக்கு உள்ளே செலுத்தப்படுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சுற்றுப்புறச்சூழல் சட்டங்களின் உலகளாவிய மதிப்பீடு

- ஐக்கிய நாடுகள் தனது முதலாவது சுற்றுச்சூழல் சட்டங்களின் உலகளாவிய மதிப்பீட்டை வெளியிட்டு இருக்கின்றது.
- கடந்த நாற்பது ஆண்டுகளில் 38 முறைக்கும் அதிகமாக பசுமைச் சட்டங்கள் வடிவமைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட போதிலும் சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அமல்படுத்துவது மீது உலகம் மிகக் குறைவான கட்டணங்களைச் செலுத்துகின்றது என இந்த அறிக்கை கூறுகின்றது.
- ஏறக்குறைய 88 நாடுகள் ஒரு ஆரோக்கியமான சுற்றுச்சூழலை வழங்கும் அரசியலமைப்பு உரிமையை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் 350க்கும் மேற்பட்ட சுற்றுச்சூழல் நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இருக்கின்றன.
- ஆனால் பருவநிலை மாற்றத்தைக் கணிப்பது, மாசுவைக் குறைப்பது மற்றும் உயிரினங்கள் மற்றும் அதன் வாழ்விடங்கள் மிகப்பரவலான அளவில் அழிந்து போவதைத் தடுப்பது போன்றவற்றில் இருக்கும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று சுற்றுச்சூழல் சட்டங்களை முழுமையாக நிறைவேற்றி அதனை அமல்படுத்துவதில் ஏற்படும் தோல்வி ஆகும்.
- சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைகளை நிறைவேற்றுதல் மற்றும் அதன் மோசமான விளைவு ஆகியவற்றிற்குப் பின்னால் இருக்கும் மற்ற விவகாரங்கள் பின்வருமாறு
    - அரசு நிறுவனங்களுக்கிடையே இருக்கும் மோசமான ஒத்துழைப்பு
    - நிறுவன அமைப்புகளில் உள்ள பலவீனமான திறமை
    - தகவல்களை அணுகுவதில் உள்ள பற்றாக்குறை
    - ஊழல் மற்றும் சிக்கலான நகர நிர்வாகத்தின் ஈடுபாடு

# மாநிலச் செய்திகள்

## விலை கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

- விலை கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு (price monitoring and research unit - PMRU) ஒன்றை ஏற்படுத்தும் முதல் மாநிலமாக கேரளா உருவெடுத்திருக்கின்றது.
- மருந்துப் பொருட்கள் விலைக் கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றின் விலை மீதுள்ள விதிமீறல்களைப் பின்தொடர அது எண்ணுகின்றது.
- தேசிய மருந்துப் பொருட்கள் விலை நிர்ணய ஆணையமானது மாநிலங்களுக்கும் ஒன்றியப் பிரதேசங்களுக்கும் இது போன்ற ஒரு அமைப்பை முன்மொழிந்து ஐந்து ஆண்டுகள் ஆன பிறகு இந்த மாற்றம் வந்திருக்கின்றது.
- மாநில சுகாதாரச் செயலாளர் இச்சங்கத்தின் தலைவர் ஆவார். மருந்தகக் கட்டுப்பாட்டாளர் இதன் உறுப்பினர் செயலாளராக இருப்பார்.
- இது மாநில அரசுப் பிரதிநிதிகள், தனியார் மருந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு மன்றத்தின் பிரதிநிதிகள் ஆகியோரை

உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.

- இந்த சங்கம் மருந்தகக் கட்டுப்பாட்டாளரால் தலைமை தாங்கப்பட்ட ஒரு செயற்குழுவையும் கொண்டிருக்கும்.

## சிறந்த நிதிநிலை அறிக்கைத் தயாரிப்பு முறை

- டிரான்ஸ்பேரன்சி சர்வதேச நிறுவனத்தால் எடுக்கப்பட்ட ஆய்வின்படி, நிதிநிலை அறிக்கை தயாரிப்பில் மாநிலங்களால் பின்தொடரப்படும் சிறந்த வழிமுறைகளுக்கான தரவரிசைப் பட்டியலில் அசாம் முதலிடத்தைப் பிடித்திருக்கின்றது.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசாவால் அது பின்தொடரப்படுகின்றது.
- பட்டியலின் கடைசி இடங்களில் மேகாலயா, மணிப்பூர் மற்றும் பஞ்சாப் ஆகியன உள்ளன.
- இந்த ஆய்வு பின்வரும் நான்கு காரணிகளைக் கொண்டது.
    - பொது வெளியீடு
    - நிதிநிலை அறிக்கைத் தயாரிக்கும் முறை
    - நிதிநிலை அறிக்கைக்குப் பிறகான நிதி மேலாண்மை
    - நிதிநிலை அறிக்கையை மிகுந்த வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் குடிமக்களுக்கு அறிமுகமானதாகவும் மாற்றிட மேற்கொள்ளப்படும் முயற்சிகள்.
- 29 மாநிலங்கள் மற்றும் இரண்டு ஒன்றியப் பிரதேசங்களில் பொது வெளியில் ஒரு குடிமக்கள் நிதிநிலை அறிக்கையை வெளியிட்ட ஒரே மாநிலம் அசாம் மட்டுமே ஆகும்.
- மாநிலத்தின் 17 மாவட்டங்களில் நிதிநிலை விழிப்புணர்வை நடத்தியிருக்கின்ற வகையில் இருக்கும் ஒரே அரசாங்கம் அசாம் அரசாங்கம் மட்டுமே ஆகும்.

## காலா கோடா விழா

- இந்தியாவின் மிகப்பெரிய பன்முக கலாச்சராத் தன்மை கொண்ட வீதித் திருவிழாவான காலா கோடா விழா மும்பையில் தொடங்கியது.
- இது 20 வருடங்களின் கலை மற்றும் கலாச்சாரத்தைத் திரைப்படம், நாடகம், நடனம், இலக்கியம் மற்றும் சிற்பக்கலை ஆகியவற்றின் மூலமாகக் கொண்டாடுகின்றது.
- காலா கோடா அமைப்பின் தலைவர் மானெக் தாவர் ஆவார்.
- இந்தத் திருவிழா மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தின விழாவையும் மும்பையின் செழுமையான வரலாற்றின் சில பகுதிகளையும் கொண்டாடுவதற்காக ஜஹாங்கீர் கலை காட்சிக் கூடத்தில் ஒரு கண்காட்சியை நடத்தியது.
- இவ்வருடத்திற்கான கருத்துரு “காலத்திற்கு ஒரு அளவீடு” என்பதாகும்.

## பல்லுயிர்த் தன்மை குறியீடுகள்

- கோவா மாநில பல்லுயிர்த் தன்மைக்கான வாரியம் சமீபத்தில் பல்லுயிர்த் தன்மை குறியீட்டு முறை ஒன்றை அறிமுகப்படுத்தியது.
- இது பல்லுயிர்த் தன்மை கொண்ட பகுதியின் உள்ளே வசிக்கும் சமூகங்கள் தங்கள் லாபங்களிலிருந்து “பகிர்ந்துக் கொள்ளப்படும் பலன்களை அணுகுவது” (Access Benefit Share - ABS) என்பதைக் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்திட எண்ணுகின்றது.
- அச்சமூகம் பயன்படுத்தும் பொருட்கள் இயற்கையிலிருந்துப் பெறப்படுகின்றன என்பதை இந்தக் குறியீடு காண்பிக்கிறது.
- விற்பனையாளர்கள் தங்கள் வருடாந்திர லாபத்தில் 0.01 சதவிகிதத்தை அந்த வாரியத்திற்குச் செலுத்திட வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.
- அதன்பின் வாரியம் இந்த நிதியை அந்தப் பொருட்கள் பெறப்பட்ட வாழ்விடங்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தும்.

# முக்கிய தினங்கள்

## பாதுகாப்பான இணைய தினம் – பிப்ரவரி 05

- இணைய தளத்தின் ஆபத்துக்களின் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு வருடமும் அனுசரிக்கப்படும் ஒரு சர்வதேச தினம் பாதுகாப்பான இணைய தினம் என்பதாகும்.
- இது 2004 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் “இன்சேப் வலையமைப்பு” என்பதால் உருவாக்கப்பட்டது.




- 2019 ஆம் ஆண்டின் பாதுகாப்பான இணையத்திற்கான தினத்தின் கருத்துரு “சிறந்த இணைய தளத்திற்காக ஒன்றுபடுதல்” என்பதாகும்.

- - - - - - - - - - - - - -